பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 26 | சனிக்கிழமை | 08.06.2024 | கதிர் 213

# 5 நீதியரசர்கள் ஆயம் முன் கரன்னாகொடவின் வழக்கு

## 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில்

11இளைஞர்கள்கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற் படைத்தளபதி வசந்த கரன்னா கொடவினால் தாக்கல் செய் யப்பட்ட எழுத்தாணை மனு மீதான விசாரணைக்காக ஐவரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாமை பெயரிடுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நிஷங்க பந்துல ☞ 2

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் விஜயராமவில் உள்ள அவரது இல்லத்தில் நடந்த கூட்டத்தில் புதிய பதவி நியமனம் செய்யப்பட்டது.

கட்சியின்தேசியஅமைப்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டது கட்சியின் மூத்தவர்களிடையே ஏற்படுத்திய அதிருப்தியைப் போக்கும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

''நான் பொறுப்புடன் எனது புதிய பதவி நிலையை முன்னெடுக்கவுள்ளோம். தேசிய அமைப்பாளர்நாமல்ராஜபக்ஷவுக்கு பக்கபலமாக செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளேன். பொது ஜன பெரமுன கடுமையாக உழைத்தவொரு கட்சியாகும். அக்கட்சியானது மீண்டும் மக்களின் ஆணையுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கும்" என்றார் ரோஹித அபயகுணவர்த்தன.

.................... ☞ 2

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவது உறுதி

### விஜயதாச ராஜயக்ச தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் களமிறங்குவது உறுதியென அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

கொடகமையில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டாளர்களுடனான சந்திப்பில், ஊடகவியலாளர்கள்எழுப்பியகேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை கூறினார்.

எவ்வாறாயினும், தமது கட்சியில் இருந்து கொண்டு வேறு கட்சியின் தலைமைத்துவத்தை பெற்றுக் கொண்டமை தொடர்பில், அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸவுக்கு ☞ 2

## ஜூலை 10 முதலே அதிகரித்த சம்பளம்

### பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிட்டும் என்கிறார் அமைச்சர்

ஜூன் 10 பெருந் தோட்டத் தொழிலாளர் களுக்கு சம்பளத்தை வழங்கும்போது, பழைய சம்பளத்தையேசிலருக்கு வழங்க வேண்டி ஏற்பட்டாலும், ஜூலை 10 முதல் கட்டாயமாக புதியசம்பளத்தைவழங்க நேரிடும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். ☞ 2

## பாலின சமத்துவச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது

### உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிப்பு

பாலின சமத்துவச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) பிரிவின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக் குட்படுத்தப்பட்ட 'பாலின சமத்துவம்' என்ற சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்துள்ள வியாக்கியானத்தை சபாநாயகர் நேற்று பின்வருமாறு சபைக்கு அறிவித்தார். இந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகளில் பெரும்பாலானவை அரசமைப் பின் 12வது பிரிவுக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இந்த சட்டமூலத்தில் உட்பிரிவு 2 இல் உள்ள சரத்து 3 மற்றும் 4 ஆகியன ☞ 2

## அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகிறார் பிரதமர் தினேஸ்

பிரதமர் தினேஷ் குணவர்தன அடுத்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வரவுள்ளார். கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று அவர் இங்கு வருகை தருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக்குழு குழுவின் தலைவர் என்றவகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அழைப்பை ஏற்று வருகை தரும் பிரதமரின் விஜயம் தொடர்பாக நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல் செய்யும் கலந்துரையாடல் ஒன்றை சூம் செயலி ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று காலை நடத்தினார்.

முன்பதாக உஸ்ஸட்ட கெய்யாவ , தல்தியாவ பகுதியில் அமைந்துள்ள முகத்துவாரப் பிரதேசத்தை த ☞ 9

## ஜனாதிபதி வேட்பாளரை சு.க. நிச்சயம் நிறுத்தும்

### மைத்திரிபால சிறிசேன இப்படி அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளர் ஒருவரை நிச்சயம் நிறுத்தும்; அவரது விவரத்தை விரைவில் அறிவிப்போம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொடகமையில் நேற்று இடம்பெற்ற சிறீ லங்கா சுதந் திரக் கட்சியின் ஏற்பாட்டாளர்களுடனான சந்திப்பில், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் கூறினார்.

தற்போது எமது சிநேகபூர்வமான சந்திப்பொன்று ☞ 2

## ரி/2–0 உலகக் கிண்ண கிரிக்கெட் ஐ.சி.சிக்கு இலங்கை கடிதம்

இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத்திற்குச் சென்ற இலங்கை கிரிகெட் அணி எதிர்கொண்ட சிக்கல்கள் சில தொடர்பான விவரங்களை உள்ளடக்கியதாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சரும், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்திற்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணிக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும் போதே விளையாட்டுத்துறை அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க் கட்சித் தலைவர். இலங்கை அணிக்கு விமானம் ஒன்று கிடைக்காது போனமை ☞ 2

## நெல் உற்பத்திக்கு முன்னுரிமை ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

நெல் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து போட்டிமிக்க ஏற்றுமதிச் சந்தையை வெற்றிகொள்ளக்கூடிய உற்பத்திப்பொருட்களில் அதிக கவனம் செலுத்தி 2030 ஆம் ஆண்டளவில் நவீன தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி போட்டி விவசாயத்தை நோக்கிச் செல்ல வேண்டும்எனஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இல்லையெனில்எதிர்காலத்தைவெற்றிகொள்ள முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஏற்றுமதி சந்தையில் போட்டியைஎதிர்கொள்ள முடியாதஉற்பத்திகளைக் கைவிடுவதே சிறந்ததெனவும் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேசசெயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன்ரூபாஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், முன்னோடித் திட்டத்தின் ☞ 2

## அரச நிதி முகாமைத்துவ சட்டத்திற்கு எதிர்ப்பில்லை

### எதிர்க் கட்சி அறிவிப்பு

அரசநிதி முகாமைத்துவச் சட்டத்தை எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசநிதி முகாமைத்துவ சட்டமூலத்துக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஏனெனில், இந்த சட்டம் நிச்சயம் இயற்றப்பட வேண்டும். தற்போது இயற்றப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகி ☞ 8

## 20 லட்சம் புதிய அங்கத்தவர்களை ஐ.ம.சக்தியில் இணைக்கத் திட்டம்

அடுத்த 10 நாட்களில் இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராமம், நகரம், சிறிய நகரம் மற்றும் குக்கிராமம் என அனைத்துஇடங்களிலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு 20இலட்சம்புதியஅங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டம் நேற்றுத் தொடங்கப்பட்டது. கொழும்பு மாவட்டத்திற்கான திட்டத்தை ஹோமாகமவில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடக்கிவைத்தார்.

ஒன்பது மாகாணங்களிலும், 25 மாவட்டங்களிலும் பிரதேச செயலகம் மற்றும் உப பிரதேச செயலகம் 341 இலும், கிராம உத்தியோகத்தர் பிரிவு 14த021 இலும், 51000 கிராமங்களில் வசிக்கும், இநாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களில் பெரும்பான்மை ☞ 2

## வெள்ளம் பாதித்த குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் உடனடி உதவி நிதி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவீட்டிற்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட கொலன்னாவ பிரதேச மக்களின் நலன்களைத் தேடியறியும் நோக்கில் நேற்று கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவாரா இல்லையா என்பது இன்னும் மர்மமாகவே இருக்கின்றது. அவரைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் அவர் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டாலும் அவர் இன்னும் உறுதியாக அதனை அறிவிக்கவில்லை.

தேர்தலை ஒத்திவைத்து தனது பதவியை நீடிப்பதற்கு அல்லது கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு அவர் முயற்சிக்கக்கூடும் என்கிற கருத்து நிலவுகின்றது. இந்த நிலையில் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான ரணிலின் முடிவு ஜூலை மாதத்தின் நடுப்பகுதியில் தெரியவரும்என்றுபட்டாலிசம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜூலை மாத முதல் வாரத்தில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் புலனாய்வுத் துறையினரால் இரகசியமாக நடத்தப்படவுள்ள கருத்துக் கணிப்பு முடிவுகளைப் பார்த்துவிட்டே போட்டியிடுவது தொடர்பானமுடிவைரணில்எடுப்பார் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் மீண்டும் ஒரு கூட்டுக்குள்கொண்டுவருவதற்கான முயற்சிகள் திரைமறைவில் தீவிரம் பெற்றிருக்கின்றன என்றும் தகவல்கள் வருகின்றன. சஜித் தரப்பை ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திருப்பிக்கொண்டுவர முடியவில்லையாயினும் இரு தரப்பினரையும்ஒருகூட்டணிக்குள் கொண்டுவருவதற்கானமுயற்சிகளிலேயே அதிக அக்கறை காட்டப்படுகின்றது. பிராந்தியவல்லரசுஒன்றின் அனுசரணையுடன்இந்தமுயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனால், முரண்டு பிடிக்கும்சஜித்தரப்பு, முதலில்ரணில் பெரமுனவைவிட்டுவிட்டுவெளியில் வரட்டும் அதன் பின்னர் கூட்டணி பற்றிப் பேசலாம் என்கின்றது.

அதற்குச்சம்மதித்தால்அரசனை நம்பிப்புருசனைக்கைவிட்ட மாதிரி ஆகிவிடுமோ என்கிற அச்சத்தில் தவிக்கிறாராம் ரணில்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 5 நீதியரசர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருணாரத்ன தெரிவித்துள்ளார்.-

மேன்முறையீட்டுநீதிமன்றத்தின் தலைமைநீதிபதிநிஷங்கபந்துலகருணாரத்னமற்றும்ஷஷிமகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க சில இடங்களிலிருந்து 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இதற்கான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முழுமையான நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் விசாரிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த கோரிக்கையை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், தற்போது ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமை பெயரிட்டுள்ளது.

இந்த மனு ஜூன் 25 மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைய, அன்றைய தினம் ஐவரடங்கிய மேன்முறையீட்டுநீதிமன்றநீதிபதிகள் குழாம்முன்னிலையில்மனுமீதான விசாரணைகள்இடம்பெறவுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்துள்ளார்.

இதன்போது, பாதிக்கப்பட்ட பெற்றோர் சார்பில் விடயங்களை முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வசந்த கரன்னாகொட எந்த வகையிலும் தப்பிக்க முடியாதென்பதை நிரூபிக்கும் வகையில், நீதிமன்றத்தில்விடயங்களைமுன்வைக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## அடுத்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையைமேற்கொள்ளதீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின்தேசியஒருங்கிணைப்பாளராக ரோஹித அபேகுணவர்தன இன்று நியமிக்கப்பட்டார்.

கட்சியின் நிறைவேற்றுச் சபை மற்றும் அரசியல் குழு கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்ட நிலையில், அமைச்சர் விஜேதாச ராஜபக்ஸவிற்குஎதிரானஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் சாகல ரத்நாயக்கவினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

## ஜூலை 10 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெல்வோம்சிறீலங்காநிகழ்ச்சித் திட்டத்தின் திருகோணமலை மாவட்டத்திற்கான நிகழ்வில் கலந்துகொண்டபோதே தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் இந்த கருத்துகளை தெரிவித்தார்.

மாதத்தின் 10 ஆம் திகதி சம்பளம் வழங்கப்பட்டாலும் ஒவ்வொரு மாதத்தின் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையே சம்பளம் கணக்கிடப்படுவதாகஅவர்கூறினார். எனவே, இந்த மாதத்தின் 10 நாட்கள் மாத்திரமே அதிகரித்த சம்பளத்துடன் தொடர்புபடும் என்பதால், இந்த மாதம் 10 ஆம் திகதி சம்பளத்தைவழங்கும்போதுபழைய சம்பளத்தையே சிலருக்கு வழங்க முடியுமென அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல்கட்டாயமாகபுதியசம்பளத்தை வழங்க வேண்டுமென தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறினார்.

அது மாத்திரமன்றி, பழைய சம்பளத்தின் நிலுவை கொடுப்பனவையும்இந்தமாதத்தின்பத்துநாட்களுக்கு அதிகரித்த சம்பளத்தையும் நிறுவனங்கள் வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் தோட்டங்களில் சம்பளத்தை வழங்குவதற்கு முன்னதாக அரச தோட்டங்களில் சம்பளத்தை வழங்கி ஆளும்தரப்பு முன்னுதாரணமாக செயற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நெல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற் போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் விவசாயம் மற்றும் மீன்பிடி அமைச்சுக்களின் கீழ் உள்ள திட்டங்கள், இளைஞர் விவசாய-தொழில்முனைவோர் கிராமங்களை நிறுவுவதற்கான திட்டங்கள் மற்றும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் தனியார் துறையின் பங்களிப்பு ஆகியவை அடங்கும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி சந்தைக்கான பொருட்களைபோட்டித்தன்மையுடன் வழங்குவதும், அதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையை வெல்வதும், அந்நியச் செலாவணி மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை அதிகரிப்பதும்இந்ததிட்டத்தின்ஊடாக எதிர்பார்க்கப்படும் இலக்குகளாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்காக, குரங்குகள் மற்றும் காட்டு யானைகளால்பயிர்களுக்குஏற்படும் சேதங்கள் மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிப்பது குறித்து வெகுவாக ஆராயப்பட்டது.

எதிர்கால ஏற்றுமதி சந்தையில் போட்டியைஎதிர்கொள்வதற்குநவீன தொழில்நுட்பம்இன்றியமையாதது எனவும், விவசாய நிலங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவை எனவும் கலந்துரையாடலில் கலந்து கொண்டதனியார்துறைபிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை எனும் தனித்துவத்துடன்கூடியபொருட்களைசர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு தற்போதுள்ள தடைகளை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலையீடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 20 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப அணிதிரளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு விடுத்தார்.

நாட்டைதன்னிறைவு அடையச் செய்ய, வறுமை இல்லாத நாட்டை உருவாக்க, தொழில்மயமாதல் விரிவாக்கமடையும், பொருளாதார வளர்ச்சி துரிதமாக அதிகரிக்கும், அதன் பயன்களை அனைவரும் பகிர்ந்துகொள்ளும் நாட்டை உருவாக்கஐக்கியமக்கள்சக்தியோடு இணைந்து கொள்ளுமாறு 220 இலட்சம் மக்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்தார்.

ஜூன்16வரைநாடுமுழுவதும்இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. சகல தேர்தல் தொகுதிகளிலும் அந்தந்த தேர்தல் தொகுதிகளின் பிரதான அமைப்பாளர்களின் தலைமையில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. சம்பத் கமகேயின் பிறந்த தினத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. நாம் அரசியல் கலந்துரையாடலொன்றைமேற்கொண்டோம்.

அம்பாந்தோட்டையில் ஐக்கிய தேசியக்கட்சியின்கூட்டமேஉள்ளது. அதற்கு நாம் செல்வதில்லை. சுதந்திரக் கட்சி ஆளும் தரப்புடன் பேச்சு நடத்துவதில்லை.

சுதந்திரக் கட்சியின் மூன்று நான்கு பேர் ஆளும் தரப்புக்குத் தேவையானது போன்று நடனமாடுகின்றனர். நாம் எங்கும் பிளவுபடவில்லை. ஆகவே அந்த மூன்று நான்கு பேரின் பின்னால் செல்பவர்கள்தான் சிரமத்துக்கு உள்ளாகுவார்கள்.

நாம் ஜனாதிபதி தேர்தல் குறித்த தீர்மானத்தினை விரைவில் அறிவிக்கவுள்ளோம். சிறீ லங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கும். அது நிச்சயம் - என்றார்.

சுதந்தரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச என்று மைத்திரி ஏற்கனவே ஒரு தடவை அறிவித்திருந்த நிலையில்தான் தற்போது அவர் இந்தக் கருத்தையும் தெரிவித்திருக்கிறார்.

## ரி/2-0...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தே இங்கு குறிப்பிட்டார். ஆனால் இதன்போது இலங்கை அணி மாத்திரமல்ல, அயர்லாந்து மற்றும்தென்னாபிரிக்காஅணிகளும் விமானமொன்றின் தொழில்நுட்பக் கோளாறினால் 7 மணித்தியாலங்கள் இவ்வாறு விமான நிலையத்தில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

ஒவ்வொரு நாட்டிற்கும் அமெரிக்காவில் வேறுபாடு காட்டப்படுகிறது. பல சிக்கல்களுக்கு மத்தியில் உலக கிரிகெட் நிறுவனம் அமெரிக்காவில் இப்போட்டியை நடத்துகின்றது. அமெரிக்க கிரிகெட் நிறுவனம் ஐ.சி.சி நிறுவனத்தினால்தடைசெய்யப்பட்டே உள்ளது. எனினும் கிரிகெட் விளையாடுகிறார்கள்.

நானும் எனது சொந்தச் செலவில் இந்தப் போட்டியை பார்க்கச் சென்றேன். புக்லின் மெரியட்டில் மேலும் அணிகள் காணப்பட்டன. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுவீரர்கள்தங்கியிருக்கும் ஹோட்டல்என்பவற்றிற்கு இடையே 45நிமிடப் பயணத் தூரம் இருக்க வேண்டுமாயினும் ஒன்றரை மணித்தியாலமளவில் தூரத்தில் ஹோட்டல் அமைந்திருந்தது.

ஆடுகளம்கூடப்பொருத்தமற்றது. இன்று இரவு நடைபெறவுள்ள போட்டியில்விஷ்ளாயட்டுவீரர்களின் உயிர் போய் வரும் என நாம் நினைக்கின்றோம். ஆனால் இப்போட்டியில் தற்போது 3000 ரூபாயிற்கு ஆகக் குறைந்த டிக்கட் வழங்கப்படுகின்றது. ஆடுகளத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலிலேயே இந்திய அணி தங்கியுள்ளது.

போட்டி நடைபெறுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரியொருவரைஇதுதொடர்பாகக் கண்டறிவதற்காகஅமெரிக்காவிற்கு அனுப்பியிருந்தாலும், இந்தப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டிருக்கவில்லை. விரைவில் இது குறித்தும் விசாரணையொன்று மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

# ஜெனரல் சவேந்திரவுக்கு மீண்டும் பதவி நியமனம்

பாதுகாப்பு படைகளின் பிரதானியாக ஜெனரல் சவேந்திர சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஒப்புதலின் பேரில் உரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த நியமனம் ஜூன் 1 முதல் டிசெம்பர் 31, 2024 வரை செல்லுபடியாகும்.

## பாலின ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 9, 10,12, 14(1)(இ) மற்றும் 27(1)(ஜி) ஆகியவற்றுக்கு முரணானது.

அரசமைப்பு 4, 7, 17, 18, 25, 26 மற்றும் 27 ஆகிய பிரிவுகள் 9, 10,12(1),14(1)(இ), 14(1)(எப்) ஆகியன அரசமைப்பின் 27(1)(பு) உட்பிரிவு 5 மற்றும் 6-ன் கீழ் அமைக்கப்படவுள்ள கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்கப்படுவது, சரத்தின் 7 உடன் ஒன்றிணைத்து வாசிப்பதுடன், 9, 10,12(1), 14(1)(ந), 14(1)(எப்) ஆகிய பிரிவுகளுக்கு முரணானது.

அத்துடன் அரசமைப்பின் 27(1)(ஜி),சரத்தின் 17 மற்றும் 18ஆவது உட்பிரிவுகள், 'பாலினமையப்புள்ளி' அலுவலகத்தின் தேவையை அமைக்கிறது.மற்றும் மசோதாவின் 8 முதல் 16 மற்றும் 19 முதல் 24 வரை உள்ள விதிகள், இருப்பு, மேலாண்மை மற்றும் உடற்பயிற்சிக்கான தற்செயலான விதிகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அரசியலமைப்பின் 9, 10, 12(1), 14(1)(ந), 14(1)(எப்) மற்றும் 27(1)(ஜி) ஆகிய பிரிவுகளுக்கு முரணானது.

## வெள்ளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கும் 10,000 ரூபா கொடுப்பனவு உடனடியாக வழங்க தீர்மானிக்கப்பட்டது. மேலும், பகுதி அளவில் அல்லது முழுமையான சேதம் ஏற்பட்ட வீடுகளைக் கண்டறிந்து,அந்தக்குடும்பங்களுக்கு மேலும்இழப்பீடுவழங்கநடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

2019 சுற்றறிக்கையின்படி, வெள்ள அனர்த்தம் ஏற்பட்டால், இடைத்தங்கல்முகாமில்இருந்தமக்களுக்கு மாத்திரமே இழப்பீடு வழங்கப்பட்டது. ஆனால் சுற்றறிக்கையை மாற்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கநடவடிக்கைஎடுத்துள்ளோம். அதன்படி, அந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று வீட்டை துப்புரவு செய்யும் பணிகளைத் தொடர முடியும்.

ஜனாதிபதியின்பணிப்புரையின் பிரகாரம்அனர்த்தத்தினால்முற்றாக சேதமடைந்த வீடுகள் அனைத்தும் இராணுவத்தின்பங்களிப்புடன்அரச செலவில்நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மருந்துகள் தேவைப்படும் மக்களுக்கு மருந்துகளை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெள்ளம் வடிந்த பிறகு, மக்கள் பொதுவாக தொற்றுநோய்களால் பாதிக்கப்படுவார்கள். குறிப்பாக சிறு குழந்தைகளையும்முதியோரையும் இதுபோன்ற நோய்களில் இருந்து காத்துக்கொள்ள வேண்டும்.

டெங்குநோய்பரவும்அபாயத்தில் உள்ளோம். அதை எதிர்கொள்ளும் திட்டத்தை தயாரித்துள்ளோம். கடற்படை, செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படாத அருகில் உள்ள மக்களையும்இணைத்துக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிணறுகளை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனர்த்தத்தினால் பாதித்த பகுதிகளில் உள்ள மக்களின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க வைத்திய முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுமருத்துவக் குழுக்களும்வைத்தியமுகாம்களை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. பிரதேச செயலகங்கள் ஊடாக பல மருத்துவ சிகிச்சை நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த இராணுவ மருத்துவக் குழுக்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேச மக்கள் குறித்தும் ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். அதிகாரிகளுக்குத் தேவையான அனைத்து நிவாரணங்களையும் வழங்குமாறுஜனாதிபதிபணிப்புரை விடுத்துள்ளார்.

இதுபோன்ற வெள்ளப்பெருக்கு மீண்டும்ஏற்படாமல் இருக்க தகுந்த திட்டம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அனுமதியற்ற நிர்மாணங்கள், காணிகளை நிரப்புதல் போன்ற காரணங்களால் இதுபோன்ற வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எனவே, வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அனுமதியற்ற கட்டுமானம் மற்றும் காணி நிரப்புப் பணிகளை நிறுத்த அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறவும் எதிர்பார்க்கப்படுகிறது.

களனி ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள மக்களுக்காக புதிய நகரமொன்றைஉருவாக்குவதுகுறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக மருத்துவமனைகள், பாடசாலைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் என அனைத்து வசதிகளுடன் கூடிய நகரத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஐனுர் மருத்துவமனை, இ.போ.ச டிப்போ போன்ற அரச நிறுவனங்கள் உள்ளன. எனவே புதிய நகரை உருவாக்குவது குறித்து இப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி எதிர்காலசெயற்பாடுகளைநடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு அனைவரின் இணக்கப்பாட்டுடன் சரியான வேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இத்திட்டம் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஆதரவு அவசியம்

## வைத்தியர் சுதத் சமரவீர கோரிக்கை



டெங்கு நோய் சுகாதாரப் பிரச்சினை மட்டுமன்றி, அது ஒரு பொருளாதார, சமூகப் பிரச்சினையாக உள்ளதாகவும், பொதுமக்களின் பூரண ஆதரவின்றி சுகாதார அமைச்சால் மட்டும் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் 25,000 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு ஒன்பது பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட விசேட வைத்தியர் கலாநிதி சுதத் சமரவீர இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு நிலைமையுடன் டெங்கு, தொற்றுநோய் மட்டத்திற்கு அதிகரிக்கக் கூடும் என்பதால் நோய்ப் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த வைத்தியர் கலாநிதி சுதத் சமரவீர மேலும் கூறியவை வருமாறு -

டெங்கு என்பது வயது மற்றும் அந்தஸ்தைப் பார்க்காமல் தொற்றக்கூடிய ஒரு நோயாகும். மேலும், பலர் இந்த நோயிலிருந்து மீண்டாலும், உயிரிழப்பு அபாயம் உள்ள ஒரு நோய் இது. இந்த அபாயம் காரணமாகத்தான் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து மக்களுக்கு எடுத்துரைக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காலப்பகுதியில் பருவமழை வருவதால் டெங்கு பற்றி அதிகம் பேச வேண்டியுள்ளது.

அதன்படி, 2023 இன் இறுதியில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2024 ஜனவரி இல் 10,000 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.ஆனால் அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து ஏப்ரல் மாதமளவில் 2234 நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியுள்ளனர். ஆனால் மே மாதத்தில் 2647 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இதன்படி, எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

டெங்கு என்பது உடல்நலப் பிரச்சினை மட்டுமல்ல. இது ஒரு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினையாகும். எனவே, பொதுமக்களின் பூரண ஆதரவின்றி சுகாதார அமைச்சால் மாத்திரம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியாது. நாடென்ற வகையில் அரசாங்கத்தின் அனைத்து துறைகள், தனியார் துறைகள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டால் மாத்திரமே டெங்கு நோயைத் தடுக்க முடியும். - என்று அவர் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்திய அதிகாரி, விசேட வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவிக்கையில் -

2024ஆம் ஆண்டு இலங்கையில் 25 ஆயிரத்து 417 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. டெங்குவைத் தடுப்பதற்கான மிக அடிப்படையான வழி, நுளம்பு பரவலைத் தடுப்பதாகும். அதற்கு வீடுகள், பாடசாலைகள், பணியிடங்களில் நுளம்புகள் உருவாகும் இடங்களை அகற்றுவது பொது மக்களின் பொறுப்பாகும்.

மேலும், காய்ச்சல் ஏற்பட்டால், இரண்டு நாள்களுக்குள் அருகில் உள்ள மருத்துவமனை அல்லது தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி, உரிய ஆலோசனை பெற வேண்டும். நோயறிதலை மருத்துவரிடம் விடுங்கள். இங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த 'பெரசிட்டமோல்' மாத்திரையை மாத்திரம் உட்கொள்ள வேண்டு. - என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைத் தலைவரும் தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் விசேட வைத்தியருமான ஆனந்த விஜேவிக்ரம தெரிவிக்கையில் -

இந்தக் காலகட்டத்தில் அதிக காய்ச்சல், வயிற்று வலி, வாந்தி, கடுமையான தலைவலி, வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதை டெங்கு நோயாகக் கருதுவது மிகவும் அவசியம். இந்த அறிகுறிகள் இருந்தால், முதலில் உடல் ரீதியாக ஓய்வெடுப்பது அவசியம். வலி நிவாரணி அல்லது 'பெரசிட்டமோல்' தவிர ஏனைய மருந்துகளை உட்கொள்ளக் கூடாது. மற்ற மருந்துகளை உட்கொள்வது கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும். அறிகுறிகள் இரண்டு நாள்களுக்கு மேல் நீடித்தால், முழுமையான இரத்த எண்ணிக்கைப் பரிசோதனை செய்து, அரச மருத்துவமனையில் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். அதன் பின்னர் தேவையிருப்பின் மருத்துவமனைக்குச் செல்லலாம்.

இதற்கிடையில், நீங்கள் நீர் மற்றும் கஞ்சி வகைகள், ஜீவனி, இளநீர் மற்றும் எலுமிச்சை போன்ற பானங்களைப் பருக வேண்டும். சிவப்பு நிறத்தில் அல்லது செயற்கை இரசாயனங்கள் கொண்ட பானங்களைத் தவிர்ப்பதும் முக்கியம். நீங்கள் மருத்துவ ஆலோசனையைப் பின்பற்றினால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தவும், நிலைமையின் தீவிரத்தை குறைக்கவும் முடியும். குறிப்பாக, காய்ச்சல் குறைவதால் டெங்கு நோய் குணமாகிவிட்டதாக அர்த்தம் இல்லை.

மிகவும் சிறிய குழந்தைகள், நீரிழிவு நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் பருமனானவர்கள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. அவர்கள் ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனை பெறுவது முக்கியம். - என்று தெரிவித்தார்.

கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக ஆலோசகரும் பிராந்திய தொற்றுநோயியல் விசேட வைத்தியருமான புத்திக மகேஷ் தெரிவிக்கையில் -

மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு மிகவும் முக்கியமானது. தற்போது பெய்து வரும் மழையால், அதற்கான கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.நுளம்பின் வாழ்க்கைச் சுழற்சியின் படி, குடம்பி நிலையிலிருந்து நுளம்பாக மாற 07 நாள்கள் ஆகும் என்பதால், வாரத்திற்கு ஒருமுறை சுற்றுப்புற சூழலை சுத்தம் செய்வதன் மூலம் டெங்கு பரவுவதை எளிதாகக் கட்டுப்படுத்தலாம். குறிப்பாக நிவாரண முகாம்களை சுற்றியுள்ள பகுதிகளை முற்றிலும் நுளம்புகள் இல்லாத பகுதிகளாக மாற்ற வேண்டும்.

டெங்கு மற்றும் பிற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த பிரதேச சுகாதார அலுவலர் அலுவலகம் இலவச மருத்துவ ஆலோசனைகளை வழங்குகிறது. ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது, மேல் மாகாணத்தில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை குறைவு. மக்களின் ஆதரவுடன் அந்த நிலையை மேலும் குறைக்க எதிர்பார்க்கப்படுகிறது. மேல்மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள டெங்கு கட்டுப்பாட்டு குழு ஆளில்லா விமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நுளம்பு குடம்பிகளை இனங்கண்டு அதன் மூலம் குடம்பி அழிப்பு மருந்துகளைத் தெளித்து வருகின்றது. - என்றும் தெரிவித்தார்.

பூச்சியியல் நிபுணர் சகுந்தலா ஜானகி, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வைத்தியர் என். ஆரிப், வைத்தியர் சுனித் குமாரப்பெரும, ஆர். கே. எஸ். ஈ.ரணவீர ஆகியோரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர். (05)

# டெங்கு நோய்த் தொற்றால் தினமும் 100 பேர் பாதிப்பு




நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு மத்திய நிலையம் தெரி வித்துள்ளது. அதன்படி, நாளாந்தம் 100 டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜூன் மாதத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 497 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனத் நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (05)

# 5 மாதத்தில் மின்பாவனையாளரிடமிருந்து மேலதிகமாக 12 ஆயிரம் ரூபா அறவீடாம்

## பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



*இலங்கை மின்சார சபை கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் மாத்திரம் 9000 கோடி ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டியுள்ளது. இக்காலப்பகுதியில் மின்பாவனையாளர்களிடமிருந்து மேலதிகமாக 12000 ரூபா அறவிடப்பட்டுள்ளது. மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சார சபை மறு சீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -*

*மின்சார சபையை 12 கூறுகளாகப் பிரித்து அவற்றைத் தனியார் தரப்பினருக்கு வழங்கும் இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.அரச சேவை தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.*

*நாட்டில் தற்போது 1200 அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன.100 ஆண்டுகளுக்கு முன்னர் 10 அரச நிறுவனங்கள் மாத்திரமே இருந்தன. அரச நிறுவனங்களின் மொத்த செயலாற்றுகை தொடர்பில் மதிப்பாய்வு செய்ய வேண்டும். நட்டமடையும் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.*

*நட்டமடையும் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் மறுசீரமைப்பின் போது கடைப்பிடிக்க வேண்டிய வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கோட்பாடுகள் தொடர்பில் நாணய நிதியம் முன்வைத்த பொதுவான அறிவுறுத்தல்களை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை.*

*மறுசீரமைப்புக்கள் வெளிப்படைத்தன்மையுடன் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். பெயர் பலகைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களை மூட வேண்டும்.ஒரு சேவையை மூன்று அல்லது நான்கு அரச நிறுவனங்கள் முன்னெடுக்கின்றது ,இவற்றை ஒன்றிணைக்க வேண்டும்.*

*அத்துடன் அரச மற்றும் தனியார் பங்குடைமையுடன் அரச நிறுவனங்களின் சேவையை வினைத்திறனாக்க வேண்டும்.இவ்வாறான முறையான வழிமுறைகளை விடுத்து தமது விருப்பத்துக்கு அமைய அரச நிறுவனங்களை மறுசீரமைத்தால் அல்லது தனியார் மயப்படுத்தினால் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும்.*

*இலங்கை மின்சார சபை கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் 9000 கோடி ஷரூபா மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொண்டுள்ளது.இக்காலப்பகுதியில் மாத்திரம் 75 லட்சம் மின்பாவனையாளர்களிடமிருந்து மேலதிகமாக 12000 ஷரூபா அறவிடப்பட்டுள்ளது.முறையற்ற வகையில் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தினோம்.*

*மின்சார சபையின் நட்டத்தை முகாமைத்துவம் செய்வதற்காக மின்கட்டணம் பலமுறை அதிகரிக்கப்பட்டது.இதனால் சிறுமற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.5 லட்சம் மின்பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.*

*மின்சார சபையின் செயலாற்றுகையை வினைத்திறனான முறையில் முன்னெடுக்காமல் மின் கட்டமைப்பைச் சீரமைக்க முடியாது.தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த சட்டத்தால் எவ்வித மாற்றமும் ஏற்படாது. தனியார் தரப்பினரது பிரவேசத்துக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.இதனால் திருத்திக் கொள்ள முடியாத அளவுக்கு எதிர்காலத்தில் மின் கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர கொள்ள நேரிடும். - என்றார்.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிறைவேற்று அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தியவருக்கு என்ன தண்டனை?

இலங்கையின்அரசுத்தலைவர்கள்நியாயஎல்லைகளுக்கு வெளியே தான்தோன்றித்தனமாகச் செயற்படமுடியாது என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறது உயர் நீதிமன்றம். அரசுத் தலைவரின் நிறைவேற்று அதிகாரம் சவாலுக்கு உட்படுத்தப்படமுடியாத ஒன்றல்ல என்பதையும் நீதிமன்றம் ஆணித் தரமாக எடுத்து வைத்திருக்கின்றது.

கொழும்பு றோயல் பார்க்கில் 19 வயது இளம் பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கி, முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுதலை செய்தமை தவறு என்று தான் வழங்கிய தீர்ப்பின் மூலம்உயர்நீதிமன்றம்நிறைவேற்றதிகாரத்தின்எல்லைகளை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கிறது.

இந்தக் கொலையில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட சம்பத் ஜூட் அன்ரனி ஜயமஹா என்ற இளைஞருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அரசியல் செல்வாக்குள்ள அவரது உறவினர்களின் தொடர்ச்சியான அழுத்தம்காரணமாககுற்றவாளியின்தூக்குத்தண்டனையை ஆயுள்தண்டனையாகக்குறைத்தமுன்னாள்அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன, பின்னர் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் யன்படுத்து அவரைத் தண்டனையில் இருந்து முழுமையாக விடுவித்தார்.

அதனை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே உயர் நீதிமன்றம் நிறைவேற்றதிகாரத்தின் அளவுக்கு மீறி நீண்ட சிறகுகளை வெட்டியிருக்கிறது. இதனை உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தடவையும் செய்திருக்கின்றது. சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பாரத பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் குற்றவாளியான துமிந்த சில்வாவை இதுபோன்று முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச விடுதலை செய்ததும் தவறி என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதனடிப்படையில் துமிந்த சில்வா மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டு அவரது தண்டனை தொடர்கின்றது. ஆனால் மைத்திரி விடயத்தில் குற்றவாளி தப்பிவிட்டார். சிறையில் இருந்து விடுதலை பெற்ற றோயல் பார்க் கொலையாளி வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். அவரை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து தண்டனையை அவர் தொடர்ந்து அனுபவிக்க நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், அது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியது. அத்தோடு அவரை இனி எப்போது கைது செய்து தண்டனை வழங்கப்படும் என்பது தெரியாது.

சிறைக்காவலில்இருக்கும்ஒருகைதியோகுற்றவாளியோ தப்பியோடினால் அதற்கான பொறுப்பு கைதிக்குப் பொறுப்பான சிறை அதிகாரியின் மீதே சுமத்தப்படும். கைதி மீண்டும் பிடிக்கப்படும்வரை காவலர் பணியை இழப்பார். றோயல் பார்க் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி குற்றவாளியைத் தப்ப விட்டிருக்கின்றார் என்பதே நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பின் மூலம் அர்த்தப்படுத்தக்கூடிய விடயம். அப்படியென்றால் குற்றவாளியைத் தப்பவிட்ட, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திய மைத்திரிக்கு என்ன தண்டனை?

ஒரு காலத்தில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவரால் எதைவேண்டுமானாலும் செய்யலாம் என்றிருந்த நிலை, நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்புக்களால் இல்லை என்றாகிவரும்நிலையில், தவறிழைக்கும்ஜனாதிபதிகளுக்கு என்ன தண்டனை என்பதைப் பற்றியும் சிந்திக்கவேண்டி இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு, அதனை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களைத் தண்டிப்பதும் மிக அவசியம். சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றம் இனிவரும் காலங்களில்இது குறித்தும்சிந்திக்கவேண்டியதுஅவசியம்.



## இக்கரைக்கு அக்கரை பச்சை



ஆர். நடராஜ்

அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவை இருநூறு வருடங்களுக்கு மேலாக ஜனநாயகத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்நாடுகளில் தனி மனித சுதந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சட்ட திட்டங்கள் இருக்கின்றன, ஆனால் அவை எந்தவிதத்திலும் ஒருவருடைய சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று வாழ்க்கையை நடத்துவது ஒருவிதத்தில் நல்லது. நமது நாட்டிலோ மற்றவர்கள் விஷயத்தில் தலையிடுவதை தொழிலாகக் கொண்டு அலைபவர்கள், வம்பு பேசுபவர்கள் அதிகம்.

அமெரிக்க மக்கள் தனிமனித சுதந்திரத்தைக் கடைப்பிடித்தாலும் அமெரிக்க நாடு அவ்வாறில்லை. சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் அதிகாரம் கோலோச்ச வேண்டும் என்பது அமெரிக்க வெளியுறவு சித்தாந்தமாக தொடர்ந்து வருகிறது. உலகெங்கிலும் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும் என்ற போர்வையில் பல நாடுகளின் உள்ளூர் பிரச்சினையில் அது தலையிடுகிறது.

உலகில் எங்கெல்லாம் சர்வாதிகாரம் தலைதூக்குகிறதோ அங்கெல்லாம் ஜனநாயகத்தை நிலைலநிறுத்த கங்கணம் கட்டிக் கொண்டு சர்வதேச காவல்காரன்போல் அமெரிக்கா இயங்கி வருகிறது. ஆனால், அமெரிக்காவில் என்ன நடக்கிறது? உள்நாட்டில் சில பிரச்சினைகள் மக்களிடம் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்த அமெரிக்கா, 1776-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி அந்த நாட்டின் ஆளுகையிலிருந்து தன்னை விடுவித்து சுதந்திர நாடாக கால் பதித்தது. ஒவ்வொரு வருடமும் ஜூலை நான்காம் திகதியை அமெரிக்கர்கள் ஒரு பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். நாட்டிற்கு உழைத்தவர்களை நினைவுகூரல், அமெரிக்க அரசியல் சாசனத்தை பற்றிய விழிப்புணர்வு, மக்கள் கூடும் பொது இடங்களில் வாண வேடிக்கை போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஆனால், அதே நன்னாளில் பல துப்பாக்கிச்சூடு பயங்கரங்களும் நடைபெறுகின்றன என்பது வேதனைக்குரியது.

அமெரிக்க அரசியல் சாசனத்தின் இரண்டாவது திருத்தத்தின்படி அந்நாட்டு குடிமக்கள் துப்பாக்கி வைத்துக் கொள்ள உரிமையுண்டு. அதில் கட்டுப்பாடு இல்லை. கடையில் வாங்கிக் கொள்ளலாம். தற்காப்பிற்கு ஆயுதம் தேவை என்ற நிலை, நாட்டில் நிலவும் உள்நாட்டு பாதுகாப்பின்மையை உணர்த்துகிறது என்பதை மறுக்கலாகாது.

நிதானமிழந்த பல மக்கள் துப்பாக்கியை தங்களது பிள்ளைகளிடம் கொடுத்து சிறு வயதிலிருந்தே துப்பாக்கி கலாசாரத்தை வளர்க்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால், அமெரிக்காவில் மருந்து வாங்குவதில் அதிக கட்டுப்பாடு. மருத்துவர் சீட்டு இல்லாமல் ஒரு மருந்து வாங்க முடியாது. ஆனால், ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் துப்பாக்கி வாங்கலாம்! ஏன், வெடிகுண்டு தயாரிக்க வேண்டிய ரசாயனப் பொருள்களை சுலபமாக வாங்கலாம்!

பொது இடங்களில் துப்பாக்கி ஏந்திய தனி நபரால் கண்மூடித்தனமாக நடத்தப்படும் "மாஸ் ஷூட்டிங்' கடந்த பத்து வருடங்களில் மூன்று மடங்கு அதிகரித்து விட்டது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 2023-இல் 656 சம்பவங்களில் 712 நபர்கள் உயிரிழந்தனர். சுமார் 2,650 அப்பாவி மக்கள் காயமுற்றனர். பள்ளிகள், பல்கலைக்கழகங்களில் மன உளைச்சலால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சகட்டுமேனிக்கு துப்பாக்கியால் சுடும் நிகழ்வுகளும் இதில் அடங்கும்.

அந்நாட்டின் 27 மாகாணங்களில் உரிமம் இல்லாமலே துப்பாக்கி வைத்திருக்கலாம். மீதம் 23 மாகாணங்களில் மட்டும் உரிமம் பெற வேண்டும். அதுவும் எளிதாக கிடைத்துவிடும். 2023-இல் 1.4 கோடி துப்பாக்கிகளை அமெரிக்க மக்கள் வாங்கினர். துப்பாக்கிச்சூட்டால் கடந்த ஆண்டு 18,874 பேர் மாண்டனர். இதில் தற்கொலைகள் அடங்காது. தற்கொலைக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுவது எளிதாக கிடைக்கும் துப்பாக்கிதான் என்பது வருத்தமளிக்கும் தகவல்.

அமெரிக்காவில் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். திருமண வாழ்க்கை மீது நம்பிக்கை இல்லை, ஏனெனில் அதோடு வரக் கூடிய பொறுப்பு, கடமைகளைக் கண்டால் எங்கே தனது தனி சுதந்திரம் பாதிக்கப்படுமோ என்ற பயம்! துணைக்கு பூனை, நாய் வளர்ப்பில் கவனம் செலுத்துகிறார்கள். அவசர உலகில் முகம் கொடுத்து பேசக்கூட நேரம் இல்லை, மனமும் லயிக்காது. பிரசித்தி பெற்ற சான்பிரான்சிஸ்கோ நகரில் பசிபிக் கடல் முகத்துவாரத்தில் அமைந்துள்ள கோல்டன் கேட் பிரிட்ஜிலிருந்து மன உளைச்சல் காரணமாக தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்துகொள்பவர் எண்ணிக்கை அதிகம்.

அமெரிக்க சமுதாயத்தை உலுக்கும் இனனொரு பிரச்சினை, பெண்கள் தங்கள் விருப்பப்படி கருக்கலைப்பு செய்து கொள்வதற்கான உரிமை. உச்சநீதிமன்ற வழக்கு "ரோ எதிர் வேட்' மூலம் "கருக்கலைப்பு பெண்களின் அடிப்படை உரிமை' என்று வழங்கப்பட்ட தீர்ப்பு பெண்களுக்கு கருக்கலைப்பு சுதந்திரமும் பாதுகாப்பும் அளித்தது. இது 1973இ-லிருந்து தொடர்ந்து வந்தது. ஆனால் 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தத் தீர்ப்பை உச்சநீதிமன்றம் "டாப்ஸ் எதிர் ஜாக்சன்' என்ற வழக்கில் இரத்துச் செய்துவிட்டது. அந்தந்த மாநிலம் இதைப் பற்றி சட்டம் இயற்றி முடிவு செய்யலாம் என்ற தீர்ப்பு பெண் உரிமைக்கு மிகப் பெரிய பின்னடைவானது.

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் இருபது மாநிலங்களில்தான் கருக்கலைப்பதற்கான சட்டம் உள்ளது. பிறக்கப் போகும் குழந்தையை வறுமையின் காரணமாக பராமரிக்க முடியாத காரணத்தால் கருக்கலைக்க நேரிடும். தகாத உறவினால் ஏற்படும் கர்ப்பத்தை சட்டப்படி கலைப்பதற்கு பல மாநிலங்களில் வழியில்லை. வசதி படைத்தவர்கள் வேறு மாகாணங்கள் சென்று கருவைக் கலைத்துக் கொள்ளலாம். ஆனால், ஏழைகள் என்ன செய்வார்கள்? மருத்துவக் காப்பீடு அந்தந்த மாகாணத்துக்கு மட்டுமே பொருந்தும்.

சட்டப் பாதுகாப்பு உள்ள வேறு மாகாணங்களுக்கு சென்று சிகிச்சை பெற வசதியிருக்காது. முடிவில், குழந்தை பெற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. கருக்கலைப்பு செய்யக் கூடாது என்று சொல்லும் அரசு பிறந்த குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதில்லை. அது பெற்றோர்களின் பொறுப்பு என்று விட்டு விடுகிறார்கள். தாயின் மடியில்தான் சுமை விழும்.

டாப்ஸ் தீர்ப்பிற்கு பிறகு நிகழ்ந்த ஒரு மனதை உலுக்கும் சம்பவம். தகாத வன்புணர்ச்சிக்கு பலியான 10 வயது இளம் பெண் அமெரிக்காவின் ஒஹையோ மாகாணத்தைச் சேர்ந்தவள். அங்கு கருக்கலைப்பு சட்டம் இல்லாததால் அருகில் இண்டியானா மாகாணத்திற்குச் சென்று கருக்கலைப்பு சிகிச்சை பெற்றாள். சிகிச்சை அளித்த மருத்துவர் பெர்னார்டு மீது அந்த மாகாண மருத்துவக் கவுன்சில் விசாரணை நடத்தி அபராதம் விதித்தது! அந்த அளவிற்கு கருக்கலைப்பு கட்டுப்பாடு உள்ளது.

கத்தோலிக்க நாடான அயர்லாந்தில் 2012-இல் சவிதா என்ற இந்திய வம்சாவளிப் பெண் 17 வாரக் கர்ப்ப நிலையில் கருவைக் கலைத்தால்தான

(9ஆம் பக்கம் பார்க்க..)

# விடுதலைப் புலிகள் அமைப்பு போன்று காட்டு யானைகள் செயற்படுகின்றன

## முன்னாள் வனஜீவராசிகள் அமைச்சர் குற்றச்சாட்டு



காட்டு யானைகளால் இரவில் நிம்மதியாக உறங்க முடியவில்லை. வெளியில் நடமாட முடியவில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பை போல் யானைகள் செயற்படுகின்றன. சுற்றாடல் நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக்கொள்பவர்களிடம் சிறந்த திட்டம் ஏதும் கிடையாது. நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்பவர்களின் வீடுகளை யானைகள் தாக்குவதில்லை என முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின்போது வனஜீவராசிகள் அமைச்சர் பவித்ரா வனனியராச்சி பதிலளித்துக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் காட்டு யானை பிரச்சினைகள் காணப்படுகின்றன. வருடாந்தம் கோடிக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்படுகின்றன. யானை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது டொலர்களில் நிவாரணம் பெறும் தரப்பினர் நீதிமன்றத்தை நாடி முன்னெடுக்கவிருந்த செயற்பாடுகளுக்கு தடையுத்தரவை பெற்றுக்கொள்கிறார்கள்.

யானைகளுக்கு குழிகள் வெட்டும் திட்டத்தை நான் ஆரம்பித்தேன். யானைகளுக்கு ஆதரவாக தடையுத்தரவு பெறும் தரப்பினரது வீடுகளை யானைகள் தாக்குவதில்லை. வழக்கு தாக்கல் செய்பவர்களின் வீடுகளையும் யானைகள் தாக்குவதில்லை. அப்பாவி மக்களின் வீடுகளைத் தான் யானைகள் தாக்குகின்றன. இறுதியில் யானைகளும் உயிரிழக்கின்றன. மனிதர்களும் உயிரிழக்கிறார்கள். இது தேசிய பிரச்சினை.

யானைகளால் பிரதேசவாசிகள் தமது கிராமங்களை விட்டு வெளியேறுகிறார்கள். விவசாயத்துறையை மேம்படுத்த வேண்டுமாயின், யானை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். உடவளவை பகுதியில் யானைகளின் வருகையைத் தடுப்பதற்கு நான் குழிகள் வெட்டினேன். தற்போது அப்பகுதியில் யானை பிரச்சினைகள் இல்லை. சுற்றாடல் துறைசார் நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களிடம் சிறந்த திட்டமில்லை. இரவில் உறங்க முடியவில்லை. வீதியில் செல்ல முடியவில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு கூட செல்ல முடியவில்லை. விடுதலைப்புலிகள் போல் யானைகள் பொதுமக்களை அடித்துக் கொள்கின்றன. - என்றார். (05)

# இனப்பிரச்சினையை தீர்த்து தமிழர்கள் சுயகௌரவத்துடன் வாழப் பாரதப் பிரதமர் மோடி வழிசெய்து உதவ வேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் கலாநிதி ஆறு. திருமுருகன்

இந்தியாவின் அயல்நாடான இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் நீண்டகால பிரச்சினையாக இருக்கும் இனப்பிரச்சினையை தீர்த்துவைத்து சுயகொளரவத்துடன் வாழ பாரத பிரதமர் வழிசெய்யவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் பாரத பிரதமருக்கான வாழ்த்துரையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாரத தேசத்தின் பிரதமராக மூன்றாவது தடவையாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் தங்களை வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகின்றேன்.

தாங்கள் ஆற்றுகின்ற உன்னதமான சேவைக்கு மக்கள் தந்த பரிசாகக் கருதுங்கள். இதேவேளை இந்தியாவின் அயல் நாடாகிய இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால பிரச்சினையாக இருக்கின்ற இனப்பிரச்சினையே தீர்த்து வைத்து சுய கௌரவத்தோடு தமிழினம் வாழ தாங்கள் வழிசெய்யவேண்டும்.

பல லட்சம் மக்களின் உயிரை இழந்த நிலையில் செல்லெண்ணா துயருடன் வாழும் தமிழர்களின் அவலத்தை நிரந்தரமாகப் போக்குவதற்கு தாங்கள் வழி செய்யவேண்டும்.

பாரத தேசத்தை உலக அரங்கில் உயர் நிலைக்குக் கொண்டு வரும் பாரிய பொறுப்பு உங்களுக்குரியது. அதற்கு ஆணை தந்த மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து அனைத்து மக்களையும் சமமாக நேசித்து தங்கள் பணி தொடர அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் யாழ்ப்பாணத்திலிருந்து வாழ்த்துகின்றேன். - என்றார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ரஷ்யா – உக்ரைன் மோதல்கள் தீவிரம்: 1000 இலங்கையர் அந்த போர்க்களத்தில்

ரஷ்யா– உக்ரைன் மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில் சுமார் 1000 இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு சென்றிருக்கலாம். 220 பேர் தொடர்பான தகவல்களை ரஷ்ய தூதரகத்தில் ஒப்படைத்துள்ளோம். இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நல்லுறவு காணப்படுகிறது. சேவை ஒப்பந்தமில்லாமல் சென்றுள்ள இலங்கையர்கள் குறித்து பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனச் சுயாதீன எதிரணியின் உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

மியன்மார் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கும்,அவர்களின் விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எமக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய எதிர்க்கட்சியின் உறுப்பினர்களான தேசிய அலவத்துவெல,சுஜித் சஞ்சய் பெரோ உட்பட நானும் அண்மையில் மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று பல்வேறு தரப்பினருடன் பேச்சில் ஈடுபட்டோம்.

தாய்லாந்து நாட்டில் உள்ள விசேட புலனாய்வு திணைக்களம் (டிஎஸ்ஐ) ஊடாக அரசாங்கம் பேச்சுகளை முன்னெடுத்தால் மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடும் தரப்பினரிடம் அகப்பட்டுள்ள 49 இலங்கையர்களைப் பாதுகாப்பான முறையில் மீட்க முடியும்.

நேபாளம், உகண்டா ஆகிய நாடுகள் இந்த விசேட புலனாய்வு திணைக்களத்துடன் பேச்சில் ஈடுபட்டு தமது நாட்டவர்களைக் காப்பாற்றியுள்ளன. ஆகவே இவ்விடயம் குறித்து வெளிவிவகாரத்துறை அமைச்சு விசேட கவனம் செலுத்தி, துரிதகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ரஷ்யா– உக்ரைன் மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில் சுமார் 1000 இலங்கையர்கள் ரஷ்யாவுக்குச் சென்றிருக்கலாம்.220 பேர் தொடர்பான தகவல்களை ரஷ்ய தூதரகத்தில் ஒப்படைத்துள்ளோம். இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நல்லுறவு காணப்படுகிறது.ஆகவே சேவை ஒப்பந்தமில்லாமல் சென்றுள்ள இலங்கையர்கள் குறித்து பொது இணக்கப்பாட்டுக்கு வர முடியும். ஆகவே இவ்விடயம் குறித்து அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். –என்றார்.(05)

# மின் கட்டணம் குறைக்கப்பட்டதன் பின்னர் 40 லட்ச மின்பாவனையாளர் பயனடைவர்

## மின்சாரத்துறை மற்றும் வலு சக்தி அமைச்சர் கூறுகிறார்



மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனையை விரைவில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைப்போம். எதிர்வரும் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் மின்கட்டணம் குறைக்கப்படும். 68 லட்ச மின்பாவனையாளர்களில் 40 லட்சம் மின்பாவனையாளர்கள் பயனடைவார்கள் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

மின்னுற்பத்திக்கான செலவுகளை ஈடு செய்யும் வகையில் மின்கட்டணம் திருத்தம் செய்யாமல் இருந்திருந்தால் மின்விநியோக கட்டமைப் பில் எழுந்த பிரச்சினைகளுக்கு இன்றும் தீர்வு கண்டிருக்க முடியாது. மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனையை இன்று அல்லது நாளை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விடம் முன்வைப்போம்.

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணம் திருத்தம் தொடர்பான கொள்கை காணப்படுகிறது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.இதனை புதிதாக குறிப்பிட வேண்டிய தேவை கிடையாது.இதற்கமைய மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனையை கடந்த வாரம் நிறைவு செய்தோம்.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் மின்கட்டணம் குறைக்கப்படும். குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும், வீட்டு மின்பாவனையாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். 0–30 வரையான அலகுகளை கொண்ட மின்பாவனைகளில் ஓர் அலகுக்கு தற்போது அறவிடப்படும் 8 ரூபாவை 6 ரூபாவாக குறைப்பதற்கும் –

30 –60 மின்பாவனையில் ஓர் அலகுக்காக அறவிடப்படும் 20 ஷரூபாவை 09 ஷரூபாவாகவும், 60–90 வரையான அலகுகளில் ஓர் அலகுக்கு அறவிடப்படும் 30 ரூபாவை 18 ரூபாவாக குறைப்பதற்கும்,120 மின்பாவனையில் ஓர் அலகுக்கு அறவிடப்படும் 50 ரூபாவை 30 ரூபாவாக குறைப்பதற்கும் திருத்தங்கள் முன்வைக்கப்படும்.

68 லட்சம் மின்பாவனையாளர்களில் ஏறத்தாழமாக 40 லட்சம் மின்பாவனையாளர்களுக்கு மின்கட்டணம் திருத்தம் ஊடாக நிவாரணம் வழங்கப்படும். அதேபோல் மத தலங்கள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மின்கட்டணம் குறைக்கப்படும். எமது யோசனைகளை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்வைப்போம்.கட்டணம் மேலும் குறைக்க வேண்டும் என்று ஆணைக்குழு குறிப்பிட்டால் அதனையும் ஏற்போம். – என்றார். (05)



## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோம். அதேபோல் அஸ்வெசும நலன்புரித்திட்=டத்தைமீள்பரிசீலனை செய்வது சிறந்தது என்பதையும் குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

இதன்போது எழுந்து உரை யாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதைய தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக நீங்கள் குறிப்பிடுவது சிறந்தது. அதேபோல் லக்ஷ்மன் கிரியெல்லவுக்குதெளிவுபடுத்துங்கள். ஏனெனில், அவர் உங்களின் இணக்கப்பாட்டையும் இல்லா தொழிக்கிறார் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய ஹர்ஷ டி சில்வா,

அவ்வாறில்லை... நீங்களும் நாங்களும் மக்களுக்காகவே செயற்படுகிறோம். இடைப்பட்ட காலத்தில் பொருளாதாரம் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றமடையவில்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. 09 மாதத்துக்கு மாத்திரம் அஸ்வெசும வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், தற்போது 12மாதங்களுக்குதெரிவுசெய்யப்பட்ட கடன் வழங்கல் நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சமூக கட்டமைப்பு முன்னேற்றமடையவில்லைஎன்பது இதனூடாக வெளிப்படுகிறது. மக்கள் வாழ்வதற்கு போராடுகிறார்கள் என்பதே உண்மை. இதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.

நாங்கள் பொறுப்பான எதிர்க்கட்சி அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை. சிறந்த விடயங்களுக்கும், தீர்மானங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம். அரச நிர்வாக கட்டமைப்பு இலத்திரனியல் மயப்படுத்தப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன். ஏனெனில், 21ஆம் நூற்றாண்டில் கோப்பு பயன்பாடு குறைவடைந்துள்ளது. ஆகவே, அஸ்வெசும நலன்புரித் திட்டங்கள் தொடர்பான தரவுகள் இலத்திரனியல் மயப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவினர் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் விவாதிக்க சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தோம். எவரும் முன்வரவில்லை. எதனையும் மறைக்க வேண்டிய தேவையில்லை. எமது பொருளாதார கொள்கையை 2022ஆம் ஆண்டு வெளிப்படுத்தினோம். ஒருசிலர் அவற்றை பிரதி எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள்.

ஆரம்பத்தில் வெளியிட்ட பொருளாதார கொள்கை தொடர்பான திட்டத்தை புதுப்பித்து எதிர்வரும் வாரமளவில் புதிய திட்டத்தை பகிரங்கப்படுத்துவோம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும், நாட்டின் கடனை நிலைபேறான தன்மையில் பேணுவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு நாங்கள் குறிப்பிட்டோம். 2020ஆம் ஆண்டு பல முறை நான் குறிப்பிட்டேன்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தனியார் ஊடகத்தில் இடம்பெற்ற கருத்தாடலின்போது சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லுமாறு நான் குறிப்பிட்டேன். தேசிய மட்டத்தில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய தேவை கிடையாது என்று தற்போதைய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அன்று குறிப்பிட்டார். இன்று ஏதும் தெரியாதது போல் பேசுகிறார்.

நாட்டுக்காக மாற்றமடைந்திருந்தால் அதனை வரவேற்கிறோம். 2021ஆம் ஆண்டு நாங்கள் குறிப்பிட்டதை ஏற்றுக்கொண்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்காது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின், எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் விடயங்களுக்கும் மதிப்பளியுங்கள். இல்லாவிடின், பாரிய எதிர்விளைவுகளை எதிர்க்கொள்ள நேரிடும் என்றார்.



# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## 64 லட்சம் ரூபாய் நிதியில் அன்பளிப்பு



கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 64 லட்சம் ஷரூபா பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் எஸ்.குமரவேல் மற்றும் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் த.காண்டீபன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் எரிக் வாஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருள்களைக் கையளித்திருந்தார்.

மேலும், நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் ,செந்தில்குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர்.டி.செந்தில்குமரன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் போதனா மருத்துவமனையின் ஆலோசகர் வைத்தியர் ஆ.தங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி, இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களின் உதவியுடன் நாளாந்தம் 4 நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சேவையை வழங்க முடியும் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது. (05)



# 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து

## ஒருவர் காயம்

ஹற்றன் - மஸ்கெலியா வீதியில் நோர்வூட் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணித்த கார் ஒன்று 200 அடி ஆழமுடைய பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வியாழக் கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா பிரதேசத்தில் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு மீண்டும் கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தை நோக்கிப் பயணித்த காரொன்று எதிர் திசையில் பயணித்த பஸ் ஒன்றுக்கு வழிவிடும் போது காரானது வீதியை விட்டு விலகி காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள 200 அடி ஆழமுடைய பள்ளத்தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் திக்ஓயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான காரில் குழந்தை உட்பட நால்வர் பயணித்துள்ள நிலையில் காரில் பயணித்தவர்கள் பாதுகாப்பு இருக்கைப் பட்டையை அணிந்திருந்ததால் பெரிதளவான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# கப்பம் கொடுக்க மறுத்த பஸ் நடத்துநரை கத்தியால் குத்திவிட்டுத் தப்பிய பயணி

பாதுக்க , ஹங்வெல்ல பிரதேசத்தில் பஸ் ஒன்றில் பயணித்த பயணியொருவர் பஸ் நடத்துநரிடம் கப்பம் கோரியுள்ள நிலையில் பஸ் நடத்துநர் பணத்தை தர மறுத்ததால் பயணி, பஸ் நடத்துநரை கத்தியால் குத்தி தப்பிச் சென்றுள்ளார் என பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது, சந்தேக நபரான பயணி பாதுக்க , துன்னான பிரதேசத்தில் வைத்து பஸ் ஒன்றில் ஏறியுள்ள நிலையில் பஸ் நடத்துநரிடம் 2 ஆயிரம் ஷரூபா கப்பம் கோரியுள்ளார்.

பஸ் நடத்துநர் பணத்தைத் தர மறுத்ததால் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபரான பயணி, பஸ் நடத்துநரை கத்தியால் குத்தி காயப்படுத்தித் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் பாதுக்கை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சட்டவிரோத பீடி இலைகள் பொலிஸாரிடம் சிக்கின

*அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் நேற்று (வெள்ளிக்கிழமை) பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*புத்தளம் கலப்பு கரையோரப்பகுதியில் பீடி இலைகள் மூடைகள் இருப்பதை கண்டு மீனவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கி யுள்ளனர்.*

*இதன்போது சுமார் 19 உரைகளில் 513 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த பீடி இலைகள் சுமார் 25 இலட்சம் ஷரூபாவிற்கும் அதிக பெறுமதியென மதிப்பி டப்படுள்ளதாகத் தெரியவந்துள்ளது.*

*கைப்பற்றப்பட்ட பீடி இலைகளை புத்தள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.*

*(05)*

# கார் – மோ. சைக்கிள் மோதியதில் விபத்து

## இருவர் காயம்

*காலி - யக்கலமுல்ல பிரதான வீதியில் தல்கம்பல பிரதேசத்தில் கார் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.*

*இந்த விபத்து வியாழக்கிழமை காலை 6.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*இந்த விபத்தின் போது இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*காயமடைந்தவர்கள் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)*

# இக்கரைக்கு அக்கரை பச்சை......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர் பிழைக்க முடியும் என்றிருந்தும் அந்நாட்டில் கருக்கலைப்பு சட்டம் இல்லாததால் கருவோடு உயிர் இழந்தாள். இந்தச் சம்பவத்திற்கு பல நாடுகளிலிருந்து கண்டனம் எழுந்தது. அதன் பிறகு சட்டம் மாற்றப்பட்டு மருத்துவ ஆலோசனை அடிப்படையில் கருக்கலைப்பு அனுமதிக்கப்படுகிறது.

இந்தியாவில் கருக்கலைப்பு சட்டம் 1971-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தங்களது உடல் சம்பந்தமாக முடிவு எடுக்க பெண்களுக்கு உள்ள பூரண சுதந்திரத்தை இந்த சட்டம் உறுதி செய்தது. அதன்படி கர்ப்பப் பையில் வளரும் கருவை 20 வாரத்திற்குள் பதிவு பெற்ற மருத்துவர் ஆலோசனையின்படி கலைத்துக் கொள்ள உரிமை தரப்பட்டுள்ளது. 2021-இல் பிரதமர் மோடி அரசு கொண்டுவந்த சட்டத் திருத்தத்தில் கருக்கலைப்பு காலம் 22 வாரம் வரை நீட்டிக்கப்பட்டது. அதற்கு மேல் நீதிமன்றம் மூலமாக தகுந்த காரணங்கள் அடிப்படையில் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் பல பிரச்னைகள். கொரோனா நோய்த்தொற்று 2020- - 21-இல் உலகைத் தாக்கியபோது அதன் பொருளாதார, பொது சுகாதார பாதிப்பால் துவண்டு மீள முடியாத நிலையில் தவிக்கும் நாடுகள் அதிகம். எனவே எமது நாட்டில் மட்டுமே பிரச்சினைகள் உண்டு மற்றைய நாடுகள் எல்லாம் சொர்க்கம் என்று கருதுவதைவிட்டுவிட்டு இருப்பதைக் கொண்டு திருப்பதிப்படப் பழகுவோம். சவால்களை எதிர்கொண்டு எதிர் நீச்சலடிப்போம்.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழப்படுத்துவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அப்பிரதேச கடற்றொழில் சங்கப்பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின்போது குறித்த இறங்குதுறையை உடனடியாக ஆழப்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் உரிய அதிகாரிக' ளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

இச்சந்திப்பின்போது அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதனிடையே கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள நாரா நிறுவனத்தின் பணிகளின் சமகால முன்னேற்றம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாஅவர்களின்தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

நேற்றுக் காலை அமைச்சின் கேட்போர் கூடத்தில்நடைபெற்றகலந்துரையாடலில்நாரா நிறுவனம்முன்னெடுக்கும்செயற்திின்டங்கள் ஆராயப்பட்டது.

குறிப்பாகசாலை,முல்லைத்தீவு,நந்திக்கடல் , நாயாறு, சுண்டிக்குளம் , அறுகம்பே , மட்டக்களப்பு ,சிலாபம் ,புத்தளம் , கொக்கல களப்புகளின்ஆழப்படுத்தல்மற்றும்வளங்களை பாதுகாத்தல் மற்றும் மீன் குஞ்சுகள், இறால் குஞ்சுகளை வைப்புச் செய்தல் போன்ற செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.




## நோர்வே வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்

நோர்வேயின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் சிசிலி மிர்செத் அவர்களை கிழக்கு மாகாண ஆளுநரும்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஒஸ்லோவில் சந்தித்தார்.

அமைச்சர் சிசிலி மிர்செத் அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்ட செந்தில் தொண்டமான், இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் பெருந்தோட்டப் பகுதிக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

நோர்வேயின் உதவி எப போதும் இலங்கைக்கு பக்க பலமாக இருந்துள்ளது எனத் தெரிவித்த செந்தில் தொண்டமான், இலங்கை பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது வருடத்தின் முதல் நினைவு முத்திரையையும் அமைச்சர் சிசிலி மிர்செத்க்கு வழங்கி வைத்தார். (05)



## பெண் பொலிஸ் கான்ஸ்டபிளின் பணப்பை திருடிய தம்பதி கைது

குடும்ப தகராறு தொடர்பாக முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தம்பதியினர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் பணப்பையை திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாதுவ குரே மாவத்தையில் வசிக்கும் கணவன், மனைவி இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யவதற்காக வாதுவ பொலிஸ் நிலையத்தின் முறைப்பாடுகள் பிரிவிற்கு சென்றுள்ளனர்.

இதன் போது, இவர்கள் இருவரும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் மேசையின் இழுப்பறையிலிருந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் பணப்பையை திருடிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்,சந்தேகநபர்கள் பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## பாடசாலை மாணவிகளுக்கு இலவசமாக சுகாதார துவாய்களை வழங்கும் திட்டம்

பாடசாலை மாணவிகளுக்கு இலவசமாக சுகாதார துவாய்களை (சானிட்டரி நாப்கின்) வழங்கும் வேலைத்திட்டம் நாவல ஜனாதிபதி மகளிர் கல்லூரியில் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த திட்டத்திற்கு 100 கோடி ரூபா நிதி ஒதுக்கபட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதன்படி, மாணவிகளுக்காக 1,200 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளது.

வவுச்சர்களை பாடசாலைகள் ஊடாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 06 மாதங்களுக்கு சுகாதார துவாய்களை வாங்குவதற்கான வவுச்சர்களை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (05)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் உயிரிழப்பு

மாவத்தகம பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பிலெஸ்ஸ பகுதியிலுள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

62 வயதுடைய இந்த பெண் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து தனியாக வசித்து வந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது .

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹெட்டிபொல பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பிஹிம்பிய ரத்மல பகுதியில் வியாழக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

43 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலும், சந்தேக நபர் உயிரிழந்தவரின் மூத்த சகோதரரின் மகன் எனவும் , உயிரிழந்தவரின் மகனுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

## பதுளையில் நபர் ஒருவர் ஹெரோயினுடன் கைது

பதுளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பதுலுபிட்டி பகுதியில் 5220 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 28 வயதுடைய பதுளை கிரீன்லாந்து டிரைவ், பதுலுபிட்டிய பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நேற்று (வெள்ளிக்கிழமை) பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கோடாவுடன் ஒருவர் நீர் கொழும்பில் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பம்புகுளிய பிரதேசத்தில் கோடாவுடன் சந்தேக நபரொருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 552 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ரோயல் பார்க் கொலையாளியை உடனடியாக கண்டுபிடித்துதவுக

### கொல்லப்பட்ட சுவீடன் யுவதியின் குடும்பத்தினர் வேண்டுகோள்

ரோயல்பார்க் கொலையாளியை உடனடியாகக் கண்டுபிடித்து அவரை சிறையில் அடைக்கவேண்டும் என கொலை செய்யப்பட்ட சுவீடன் யுவதியின் குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ரோயல் பார்க் கொலையாளிக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை இரத்துச்செய்யும் நீதிமன்றத்தின் உத்தரவை இலங்கையில் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களிற்குமான குறிப்பிடத்தக்க தீர்ப்பு என கொலை செய்யப்பட்ட சுவீடன் யுவதி இவோன் ஜோன்சனின் குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவான்ஜோண்சனின் குடும்பத்தவர்கள் சார்பில் அவரது சகோதரி கரோலின் ஜோன்சன் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களுக்கும் இது ஒரு குறிப்பிடத்தக்க தீர்ப்பு என குறிப்பிட்டுள்ள அவர், தன்னிச்சையான முடிவுகளால் அவர்களின் உயிரையும் கண்ணியத்தையும் சமரசம் செய்ய முடியாது என்பதை இந்த தீர்ப்பு உறுதிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இவான் ஜோன்சனின் கொலையாளிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு தன்னிச்சையானது சட்டத்தின்கீழ் செல்லுபடியற்றது என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆழ்ந்த நிம்மதியையும் நீதியையும் தருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவானின் துயரமான மற்றும் கொடூரமான இழப்பு எங்களின் இதயங்களில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இது எங்களிற்கு மிகப்பெரிய தொடரும் வலியை ஏற்படுத்தியது எனக் குறிப்பிட்டுள்ள கொலை செய்யப்பட்ட பெண்ணின் சகோதரி, முன்னாள் ஜனாதிபதி கொலையாளிக்கு மன்னிப்பை வழங்கியது மிகப்பெரும் துரோகமிழைக்கப்பட்டுள்ளது போன்ற உணர்வை ஏற்படுத்தி எங்களின் வேதனையை மேலும் அதிகரித்தது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு நீதி மற்றும் பொறுப்புக் கூறலின் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்தியுள்ளதுடன் பொதுமன்னிப்பு போன்ற தீர்மானங்களை ஒரு தனிநபர் தனது விருப்பங்களிற்கு ஏற்ப எடுக்க முடியாது என்பதை வலியுறுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் அயராது உழைத்து இந்த விவகாரம் முழுவதும் நேர்மையைக் கடைப்பிடித்த நீதித்துறைக்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கொலையாளியை விரைவாகக் கண்டுபிடித்து சிறையில் அடைக்க வேண்டியது அவசியம். நீதி உண்மையாக வழங்கப்படுவதை உறுதி செய்வதில் இது முக்கியமானது. என அவர் தெரிவித்துள்ளார்.

ஒப்படைப்பு ஒப்பந்தங்களில் உள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி நீதியைப் பின்தொடர்வதைத் தடுக்க அனுமதிக்க முடியாது. கொலையாளி எங்கு மறைந்திருந்தாலும் அவர் அவரது செயலுக்காக பொறுப்புகூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் -இதில் எந்த பேச்சுக்கும் இடமில்லை. - என அவர் தெரிவித்துள்ளார். (05)

## இடரில் சிக்கி இறந்தோருக்கு 2.5 லட்சம் ரூபாய் இழப்பீடு

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்த ஒருவருக்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நட்டஈடாக வழங்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கல்வி மற்றும் மக்கள் விழிப்புணர்வு பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

மேலும், வீடுகளை சுத்தம் செய்வதற்கு பத்தாயிரம் ரூபா முற்பணமும் வழங்கப்படும் என பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் வீடு சேதங்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

வீட்டின் அளவு மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவதற்கு எடுக்கும் நேரத்தைப் பொறுத்து, வீடு சேதத்திற்கான இழப்பீடு வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவும், வெள்ளத்தில் சிக்கியுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவும் வழங்கப்படும்.

அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்ட போதிலும் வெள்ளத்தில் குளித்தமையால் பல உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன எனவும், அபாயகரமான பிரதேசங்களில் இருந்து மக்கள் வெளியேறாததன் பிரச்சினை இன்னமும் இருப்பதாகவும் பிரதீப் கொடிப்பிப்பிலி மேலும் குறிப்பிட்டார்.(05)

## ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது

புத்தல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பசறை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹிகுருகடுவ, கொட்டகஸ்லந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் .

சந்தேக நபரிடமிருந்து 19 கிராம் 630 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக ஹிகுருகடுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்தனர .(05)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்படுத்தல் குறித்த கலந்துரையாடல்





யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குநோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் வியாழக்கிழமை மாவட்டசெயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர், தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை கவனத்தில் கொண்டு இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், புள்ளிவிவரங்களின் அடிப்படையில் 2024 ஜனவரி முதல் இன்றுவரை 4,729 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு மரணமும் பதிவாகியுள்ளதாகவும், முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ் அரையாண்டில் டெங்குநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டார். மக்களிடத்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமில்லாது, லயக்கல்வி பணிப்பாளர்கள் , பாடசாலை அதிபர்களுடனும் கலந்துரையாடி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை வளப்படுத்த வேண்டுமெனவும் , அனைத்து துறைசார் அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் டெங்குநோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என்றும் குறிப்பிடார்.

மேலும் எதிர்வரும் ஜூலை மாதம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் கிராமிய மட்டத்தில் விழிப்புணர்வு சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அந்த ஒருமாத காலப்பகுதியில் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம சேவையாளர்கள் பிரிவிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் கூட்டங்கள் நிகழ்த்துவதின் மூலமாக மக்களிடத்தே விழிப்புணர்வுகளை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

கிணறுகளில் காணப்படுகின்ற குடம்பிகளை கட்டுப்படுத்த குடம்பிகளை உண்ணும் மீன்களை கிணற்றினுள் விடுதல், வீட்டுகழிவுகள் வீதிகளில் கொட்டப்படுவதை கட்டுப்படுத்தல், கழிவுகளை தரம் பிரித்து கழிவு தொட்டிகளில் போடுவதை ஊக்குவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிளாஸ்டிக் கழிவுகளை (போத்தல்) பொது இடங்களில் சேகரிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அருள்ராஜ், மாகாண சுகாதாரசேவை பணிப்பாளர் பத்திரண, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலாளர்கள், சுகாதாரவைத்திய அதிகாரிகள், சிரேஸ்ட பொது சுகாதார பரிசோதகர்கள் , பிரதேச சபை செயலாளர்கள், தொற்றுநோயியல் பிரிவு வைத்திய அதிகாரி, சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (05)

# மட்டக்களப்பு புன்னைச்சோலை வீடொன்றில் பெருந்தொகைப் பணம், நகைகள் திருட்டு





மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குப்பட்ட புன்னைச்சோலை பகுதியில் உள்ள வீடொன்றில் வியாழக்கிழமை இரவு பெருந்தொகை பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன.

புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு பின்புறமாக உள்ள வீட்டிலேயே இந்த துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தற்போது புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் திருச்சடங்கில் கலந்துகொள்வதற்காக அவ்வீட்டில் வசிப்பவர்கள் வீட்டினை பூட்டி, சாவியை வீட்டினருகே ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர், வீடு திரும்பியவர்கள், வீட்டின் படுக்கையறையில் இருந்த அலுமாரி உடைக்கப்பட்டு, அதிலிருந்த 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் நான்கரை பவுண் தங்க நகைகளும் திருடப்பட்டமையைப் பார்த்துள்ளனர். அத்தோடு, அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமராவின் கார்ட் டிஸ்க்கும் களவாடப்பட்டிருந்தது.

வீட்டின் மதில் மீதேறி, பாய்ந்து, மறைத்துவைத்திருந்த சாவியை எடுத்து, வீட்டினுள் புகுந்து, திருடிச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தர்கள் ஆலயத்துக்கு சென்றுவரும் நேரங்களை அவதானிக்கப்பட்டே திருட்டுக் குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி ரவிச்சந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் தீவிர விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (05)

# தேயிலைத் தொழிற்சாலையில் தீ குருந்துவத்தவில் நேற்றுச் சம்பவம்




நாவலப்பிட்டி, குருந்துவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்பாய பிரதேசத்தில் உள்ள தேயிலை தொழிற்சாலையொன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) பாரிய தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக குருந்துவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை தொழிற்சாலையின் உற்பத்தி பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது நேற்று அதிகாலை 3.45 மணியளவில் திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலின் போது தொழிற்சாலையினுள் உரிமையாளரும் பணியாளர்களும் இருந்துள்ள நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலின் போது தொழிற்சாலையினுள் இருந்த தேயிலை பொதிகள் கருகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி மாநகர சபையின் தீயணைப்பு படையினர் இந்த தீ பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர .(05)

# குடாநாட்டில் தொடரும் பொலிஸ் அராஜகம்: செல்வராசா கஜேந்திரன் குற்றச்சாட்டு

வடக்கு கிழக்கில் பொலிஸாரின் அராஜகங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன என செல்வராசா கஜேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 19.11.2019 அன்று சிறிலங்கா பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்த பொழுது கடுமையான சித்திரவதைக்குட்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரின் கொலை தொடர்பில் 4 பொலிஸார் கைது செய்யப்பட்டிருக்கின்ற நிலையிலும், அதற்கு பொறுப்பதிகாரியாக இருந்த மேலதிகாரிக்கு இது வரையிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கவனம் செலுத்தாது இருப்பது ஏன் என கேள்வியெழும்பியுள்ளது. எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த காலி சிறைச்சாலைக் கைதி தப்பியோட்டம்

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலி சிறைச்சாலை கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.இவர் காலி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் வைத்தியசாலையின் கழிவறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சம்பவத்தின் போது, இவர் சிறைச்சாலை அதிகாரியிடம் கழிவறைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறியுள்ளதுடன், கழிவறைக்குச் செல்வதற்காக கை விலங்குகளை அகற்றிய சிறைச்சாலை அதிகாரி பாதுகாப்புக்காக கழிவறைக்கு முன்பாக காத்திருந்தனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.06.2024இல் வெளியிடப்பெற்றது